

# அமைச்சரின் நடனமும் ஆலிம்களின் தாளமும்

எம். எச். எம். அஷ்ரப்
எம். பி. எம். நிஸாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைச்சரின் நடனமும் ஆலிம்களின் தாளமும்

எம். எச். எம். அஷ்ரப்
எம். பி. எம். நிஸாம்

வெளியீடு:
முஸ்லிம் ஐக்கிய முன்னணி,
298 லெயார்ட்ஸ் புரோட்வே,
கொழும்பு 14.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமர்ப்பணம்

நடனமாடுவதன் மூலம் முஸ்லிம் சமூகம் தனது தனித்துவத்தை இழத்தலாகாது என தனது இறுதிமூச்சுவரை போராடியவரும் பேரறிஞரும் பெருமதிப்புக்குரியவருமான அறிஞர் மர்ஹூம்

**அல்ஹாஜ் ஏ. எம். ஏ. அஸீஸ்**

அவர்களுக்கு இச்சிறுநூல்

சமர்ப்பணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரச்சினையின் பின்னணி....

இன்று இலங்கையில் எத்தனையோ சமூக மாற்றங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. நீதித்துறையிலும், கல்வித்துறையிலும், சமூக வாழ்க்கை முறைகளிலும் சட்டமூலம் மாற்றங்களை ஏற்படுத்த அரசாங்கம் இரவு பகலாக முயன்றுகொண்டிருக்கின்றது. இச்சூழலில் நல்லவைகளை வரவேற்று, தீமை பயக்கக்கூடியவைகளை சுட்டிக்காட்டித் தூக்கியெறிவதே ஓர் உண்மை முஸ்லிமின் உயர்ந்த கடனாகும். தனிப்பட்ட நோக்கங்களுக்காகவும் கட்சிப் பாகுபாடுகள் காரணமாகவும் இப்பிரச்சினைகள் சம்பந்தமாக கண்மூடித்தனமான முடிவுகளுக்கு நாம் வருவோமாயிருந்தால்—அதுவே நமது சமுதாயத்தின் அழிவுக்கு அடிகோலும் தவறாக இருக்க முடியும். எனவேதான் சமுதாயத்தைப் பாதிக்கக் கூடிய பிரச்சினைகள் வரும்போது, தீர்க்க சிந்தனையுடனும், தெளிவுடனும் அப்பிரச்சினைகளை நடுநிலை நின்று நோக்குவது எமது கடனாகின்றது.

இந்த அடிப்படையிலேயே, இன்று முஸ்லிம் சமூகத்தைப் பிடித்துக்கொள்ள முயற்சி செய்யும் பேராபத்தையிட்டு; எச்சரிக்கை செய்ய வேண்டியது எமது கடனெனத் தீர்மானித்தோம். அரசாங்கம் செய்துள்ள மாற்றங்களில் கல்வி சம்பந்தமாக எடுக்கப்பட்டுள்ள சீர்திருத்தங்கள் மிகவும் குறிப்பிடத்தக்கன. கல்விச் சீர்திருத்தத்தின் அடிப்படை நோக்கு பாராட்டப்பட வேண்டியதும் கூட. அதற்காக அரசாங்கத்தையும், அதன் கருவியாகப் பயன்படும் கல்வி அமைச்சரையும் நாம் பாராட்டக் கடமைப்பட்டுள்ளோம். ஆனால் ஒரு சிறந்த முயற்சியைப் பாராட்ட எமக்கு எவ்வளவு உரிமையும், நெருக்கமும், சலுகையும் உண்டோ அதேயளவு உரிமையுடனும் சலுகையுடனும் அம்முயற்சிகளில் உள்ள குறைபாடுகளைக் குறிப்பிடும் உரிமையும் எமக்குண்டு.

அரசாங்கத்தினதும் அமைச்சரவையினதும் கல்வி சம்பந்தமான முடிவின் மூல அம்சமான பாடத்திட்டம் பற்றியதே முஸ்லிம் சமூகத்தின் விமர்சனமாகும். புதிய பாடத்திட்டத்தில் "அழ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கியற் கலை'' Aesthetic Education என்ற ஒரு பாடமும் சேர்க்கப்பட்டுள்ளது. 'அழகியற் கலை' என்ற இப்பாடம் 'ஓவியம் இசை நடனம்' ஆகிய மூன்று கலைகளையும் உள்ளடக்கும்.

இச்சந்தர்ப்பத்தில் தற்போதைய பொ.த.ப. (சா.த.) பரீட்சையின் பாடங்களுக்கும்; அரசாங்கத்தின் புதிய பாடங்களுக்குமுள்ள அடிப்படை வித்தியாசத்தை உணர்வது அவசியமாகின்றது. இன்றைய பாடத்திட்டத்திலுள்ள முழுப்பாடங்களின் எண்ணிக்கையில், கட்டாய பாடங்களுடன் சேர்த்து ஏதாவது எட்டுப்பாடங்களை ஒரு மாணவன் சித்தியடைந்தால் அவன் பொ.த.ப. (சா.த.) சித்தி எய்தியவனாகக் கருதப்படுவான். ஆனால் ஐம்பதுக்கு மேற்பட்ட எல்லாப் பாடங்களையும் அவன் படிக்க வேண்டிய அவசியமில்லை. ஆனால் புதிய பாடத்திட்டத்திலுள்ள எல்லாப்பாடங்களையும் ஒவ்வொரு மாணவனும் சித்தியடைய வேண்டியது அவசியமாகும். எனவேதான் ஒவ்வொரு இலங்கை மாணவனும் ''அழகியற் கலை'' என்ற பாடத்தைப் படிக்க வேண்டியது கட்டாயமாகின்றது.

'அழகியற் கலை' என்ற பாடம் ஓவியம், இசை, நடனம் ஆகிய மூன்று அம்சங்களையும் உள்ளடக்கியபோது கூட; இப்பாடத்தில் சித்தியடைய ஒரு மாணவனுக்கு 'ஓவியம் இசை நடனம்' ஆகிய மூன்றும் தெரிந்திருக்க வேண்டிய அவசியம் இல்லை. இவை மூன்றில் ஏதாவது ஒன்றைத் தெரிந்திருந்தால் பரீட்சை சித்தியடைவதற்குப் போதுமானதாகும். எனவேதான் 'அழகியற் கலை' என்ற பாடம் 'ஓவியமும் இசையும் நடனமும்' என கல்வித் திணைக்கள உத்தியோகபூர்வமான ஆவணங்களில் வரையறுக்கப்பட்டிருக்கின்றது.

'ஓவியம், இசை, நடனம்' ஆகியவற்றை முஸ்லிம் மாணவர்கள் படிப்பது எவ்வளவு தூரம் அவர்களை மார்க்க ரீதியிலும், கலாச்சார ரீதியிலும் பாதிக்கும் என்பதே நாம் அடுத்துச் சிந்திக்க வேண்டிய பிரச்சினையாகும். இம்மூன்றில் ஓவியமும் இசையும் கற்பதில் தவறில்லை என்பதில் சமூகத்தின மத்தியில் ஒருமைப்பாடு நிலவுகின்றது.

நடனம் கற்று-ஆடுதல்-அரங்கேற்றுதல் எவ்வளவு தூரம் இளம் முஸ்லிம் தலைமுறையினரை கலாச்சாரப் பண்பாட்டு அடிப்படைகளில் பாதிக்கப் போகின்றது என்பதை ஆராய்வது அவசியம் என்ற கருத்தை முதன் முதலில் வெளியிட்ட பெருமை எங்களது மதிப்புக்குரிய மந்திரி அல்ஹாஜ் கலாநிதி பதியுதீன் மஹ்மூத் அவர்களையே சாரும். இக் கருத்தை வெளியிட்டதோடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டுமல்லாமல்—இப்பிரச்சினையை ஆராய்வதற்கு சமூகத்தின் மத்தியிலுள்ள பிரமுகர்களையும், சங்கங்களின் பிரதிநிதிகளையும் அழைத்து அமைச்சர் அவர்கள் பலவித கருத்துக்களையும் சிநேக ரீதியில் வெளியிட தனது அமைச்சுக்குரிய மாநாட்டு மண்டபம் ஒன்றிலேயே அரங்கும் அமைத்துத் தந்தார்.

## கலந்துரையாடலும் விஷேட கமிட்டியும்

ஏறத்தாழ எட்டு மணிநேரம் நடைபெற்ற கலந்துரையாடலின் பின்; முஸ்லிம்களுக்கு நடனம் ஆகுமா? ஆகாதா? என்பதைத் தீர்மானிக்கும் பொருட்டு ஓரு உபகமிட்டியே நியமிக்கப்பட்டது. இக்கமிட்டிக்குத் துணைச் சபாநாயகர் அல்ஹாஜ் ஐ.ஏ. காதர் அவர்கள் தலைமை தாங்கினார். சமூகத்தில் மதிப்புள்ள பிரமுகர்களில் பலர் இதில் அங்கம் வகித்தனர். இவர்களுள் குறிப்பாக சர். ராஸிக் பரீத், டாக்டர் எம். ஸீ. எம். கலீல், மர்ஹூம் அல்ஹாஜ் ஏ. எம். ஏ. அஸீஸ், பதிவாளர் தலைமையதிபதி எச். எம். இஸட். பாரூக், ஜனாப்கள் முருட் ஜாயா, இக்பால் ஆமிட், மௌலவி ஏ. எல். எம். இப்ராஹிம், மௌலவி ஏ.ஏ.எம். மரூத், ஜனாப்கள் எஸ். எல். எம். ஷாபிமரிக்கார், ஏ. எல். ஏ. மஜீத் எம்.பி. மௌலவி ஏ. எம். எல். எம். பழீல், ஜனாப் ஏ. ஸீ. ஏ. ஹமீத் எம்.பி ஜனாப் ஏ எம். எம். ஷகாப்தீன், டாக்டர் எஸ். ஏ. இமாம், ஜனாப் எம்.எம். முஸ்தபா எம்.பி. போன்ற பல பிரமுகர்கள் அங்கம் வகித்தனர்.

பலநாட்கள் செய்த ஆய்வுகளின் பின்னர் "முஸ்லிம் பாடசாலைகளில் நடனத்தை அறிமுகம் செய்வது உகந்ததல்ல" என்ற தீர்ப்பை இக் கமிட்டி அளித்தது. "குறிப்பாக வயது வந்த முஸ்லிம் பெண்கள் நடனம் ஆடவே கூடாது" என்று சிபார்சு செய்த கமிட்டி வயது வராத பெண் சிறுமிகள் நடனம் ஆடுவதையிட்டு மௌனம் சாதித்தது.

இக் கமிட்டியின் தீர்ப்பு கௌரவ அமைச்சர் அவர்களுக்குத் திருப்தியளிக்கவில்லை. அதுமட்டுமன்றி வயது வராத பெண்களின் விஷயத்தில் கமிட்டி காட்டிய மௌனத்தை அமைச்சர் அவர்கள் ஆழமாக விமர்சித்தார். அமைச்சரின் விமர்சனத்துக்கு எங்களுடைய ஆதரவையும் தெரிவிக்க நாம் விழைகின்றோம். எனவே "வயதுப் பாகுபாடின்றி முஸ்லிம் பெண்கள் நடனமாடுவது கூடாது" என்பதே கமிட்டியினர் அளித்திருக்க வேண்டிய சரியான தீர்ப்பு என்பதை நாம் இக்கட்டத்தில் நன்கு உணர்ந்து கொள்ளலாம். இதையே கௌரவ அமைச்சர் அவர்கள் சுட்டிக்காட்டினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கமிட்டியின் அறிக்கையில் தனது அதிருப்தியைத் தெரிவித்துப் பேசிய கௌரவ அமைச்சர் அவர்கள் பின்வருமாறு கூறினார்: "குர்ஆனும் பெருமானார் (ஸல்) அவர்களின் ஹதீஸ்களும் நடனத்தை அனுமதிக்கமாட்டாது என்பது எனக்கு நன்கு தெரியும். சரியான ஷரீஅத் சட்டப்படி முஸ்லிம் பெண்கள் நடனமாடுவது கூடாது என்பதுதான் எனது கருத்துமாகும். எனவேதான், முஸ்லிம் பாடசாலைகளில் நடனத்தைப் புகுத்தாமலும் அதேவேளை அமைச்சரவை முடிவை மீறாமலுமிருக்கக் கூடியவகையில் எனக்கு ஒரு வழியைக் காட்டுமென்ற நம்பிக்கையிலேயே இக் கலந்துரையாடல்களை நடாத்தினேன். ஆனால் துர்அதிஷ்டவசமாக எனக்குத் தரப்பட்டுள்ள அறிக்கை எவ்விதத்திலும் உதவக் கூடியதாக இல்லை.'

முஸ்லிம் மாணவனோ அன்றி மாணவியோ ஓவியம் அல்லது இசை இவற்றிலொன்றைப் படிக்கலாமே என்று பரிகாரம் கூறப்பட்டபோது; அமைச்சர் அவர்கள் நடந்துகொண்ட முறை அப்பரிகாரம் அவரது காதுகளில் விழவில்லை என்றே எண்ணத் தூண்டியது. ஓவியம் இசை இரண்டிலும் திறமையற்ற மாணவனின் நிலையென்ன? என்று கேட்டதுடன் அமைச்சர் அப்பிரச்சினையையே முடித்துக்கொண்டார். ஓவியம், இசை, நடனம் ஆகிய மூன்றிலும் திறமையற்ற மாணவனைப் பற்றி அவர் ஏனோ எதுவும் குறிப்பிடவில்லை. அதுமட்டுமன்றி கட்டாய பாடங்களில் வேறு ஒன்று 'ஓடாத' மாணவனைப் பற்றியும் மந்திரி அவர்கள் சிந்திக்காதது சிரிப்பையும்—மந்திரியவர்கள் மீது சந்தேகத்தையும் ஏற்படவைக்கின்றது.

## பிரச்சினையின் விளைவு

அகில இலங்கை ஜம்இய்யதே உலமா கொழும்பு ஸாஹிறாவில் மாநாடு கூட்டியது. எதையெல்லாம் செய்ய வேண்டுமென வீறுப்புப்பேசியது. எல்லா முஸ்லிம்களினதும் அபிமானத்தையும் பெற்றிருந்த ஜம்இய்யதே உலமா ஏதாவது செய்யுமென்று நம்பியிருந்த சமூகத்துக்கு; அண்மையில் ஸாஹிறுக் கல்லூரியில் நடைபெற்ற அரபு ஆசிரியர்கள் மாநாட்டில் அதே ஜம்இய்யத்துல் உலமாவில் பொறுப்பான பதவி வகிப்பவர்கள் நடந்துகொண்ட நாக்கூசும் முதுகெலும்பில்லா நடத்தை—அவர்கள் செய்ததெல்லாம் வெறும் கண்துடைப்பு என்றே எண்ணத் தூண்டுகின்றது. அரபு ஆசிரியர்கள் மாநாட்டின் கேவலங்கெட்ட—மானங் கெட்ட—மந்திரிவால் பிடிக்கும்-போக்கை பின்னோரிடத்தில் விளக்கமாகப் பார்ப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகவேதவேளை அமைச்சரின் போக்கு என்ன? தான் பிடித்த முயலுக்கு மூன்று காலே என்னும் தலைதெறித்த எண்ணம்! தலைவீக்கம்! முஸ்லிம் சமுதாயத்தின் நலனைவிட எனது சுய மரியாதையும் கௌரவமுமே பெரியது என்ற அதிகப்பிரசங்கித்தனம். அதுமட்டுமா? அளுத்கமை முஸ்லிம் ஆசிரிய பயிற்சிக் கல்லூரியில் நடனம் போதிக்க நங்கை ஒருத்தியைப் போதனாசிரியையாக நியமித்தும் விட்டாரெனக் கேள்விப்படுகின்றோம்.

ஆபத்து வேளையிலும் அடங்கிக்கிடக்கும் முஸ்லிம் சமூகமே! இன்னுமேன் மௌனம்? உனது இளம் பெண்களை பாத்திமத்து ஸுஹறாக்களாகக் காண விரும்புகின்றாயா—அப் பாத்திமாக்கள் உலகுக்கு வீரப் புலிகளாம் ஹசன்களையும் ஹுஸைன்களையும் தருவதை விரும்புகின்றாயா? அன்றி அவர்களை நாட்டியக்காரிகளாக்கி, கூத்தாடச் செய்து கும்மாளமடிக்கப் போகின்றாயா?

எமது பெண்களை கருங்கல் துண்டுகளாக்கி வீதிகளுக்கிட்டு அவற்றின் மீது கண்டவனும் நின்றவனும் கால்மிதிப்பதைப் பார்க்கப் போகின்றாயா? அன்றி எம் பெண்களை மாணிக்கக் கற்களாக மாதர்குல மாணிக்கங்களாகக் காண விரும்புகின்றாயா? இவைகள்தான் சமுதாயத்தை நோக்கி நாமெழுப்பும் வீரவினாக்களாகும்.

## இஸ்லாம்–முஸ்லிம் பெண்கள்–நடனம்

இஸ்லாத்தின் பார்வையில் நடனத்தின் நிலையென்ன? என்பதே நாம் அடுத்து காணவேண்டிய விடையாகும். இவ்விடையைப் பூரணமாக உணர்வதெனில் நடனம் என்றால் என்னவென்பதையும் நாம் அறிதல் அவசியமாகின்றது.

### நடனம்

ஒரு பெண் நடனம் ஆடுகின்றாள் என்றால் அவள் தேகப் பயிற்சி செய்கின்றாள் என்ற அர்த்தம் அல்ல. அவள் தன் அழகிய அங்கங்களின் அசைவுகளால் சில உணர்ச்சி பாவங்களை வெளிப்படுத்திக் காட்ட முயலுகின்றாள். நாட்டியக்காரியின் முக பாவம், அபிநயம், உடல் நெளிவுகள், அங்க அசைவுகள் அந்த நடனத்தின் வெற்றிக்கு கால்களாக அமைகின்றன. தேகப் பயிற்சி செய்பவள் உடல்நலத்துக்காகச் செய்கின்றாள். ஆனால் நாட்டியம் ஆடுபவளோ பிறரைக் கவர்வதற்காகவும், பிறரின் பாராட்டுதல்களைப் பெறுவதற்காகவும் மேடைக்கு வருகின்றாள். அவளின் நடனத்தின் பண் (Theme) னுக்கு ஏற்ப உடையலங்காரம் உடலலங்காரம் முதலியன செய்யப்படுகின்றன. அவளின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்னத்துக்கு ரோசாப் பூவின் வண்ணம்-கண்ணுக்கு மை-கால்களில்-உள்ளங் கைகளில் வர்ணப் பூச்சுக்கள்-அதரங்கள் சிவப்பாக மாறும் ஆலவர்ணம்-அதற்கேற்ற கவர்ச்சியான ஆடைகள்-ஆபரணங்கள்-இவைகள் எதற்காக? அவள் எடுத்துக்கொண்ட பண்ணை சிறப்பாகச் செய்து முடிப்பதற்காக. எல்லாவற்றுக்கும் மேலாக நடனம் ஆடும்போது எடுத்துக்கொள்ளப்படும் பண்கள் சாதாரணமாக காதல்-காமம்-கலவி போன்றவையே. சில வேளைகளில் விதிவிலக்கான வீரம்-அன்பு-சக்தி போன்ற வேறு பல பண்களும் நடனம் மூலம் வெளிப்படுத்தப்படுவதை நாம் மறுக்க முடியாது. எனினும் பெரும்பான்மையான இப் பண்களை வெளிப்படுத்தவும் அவ்வாறு வெளிப்படுத்துவதால் அன்னியரைக் கவரவும் ஒரு முஸ்லிம் பெண்ணை ஷரீஅத் அனுமதிக்கின்றதா? என்பதே முஸ்லிம் சமூகத்தை நோக்கும் பெரு வினவாகும். இவ்வினவுக்கு விடைகாண, வரலாற்றைச்சற்றுப்புரட்டுவோமெனில் நடனத்தை அரசவைகளில் அனுமதித்த மொகலாய சாம்ராஜ்யமும் அதன் பாதுஷாக்களுமே நினைவுக்கு வருகின்றனர். இதே நடனம்தான் மொகலாய சாம்ராஜ்யத்தின் அழிவுக்கே கால்கோலியது என்பதை சிந்திக்கக் கூடிய, வரலாறு படித்தவர்கள் இலகுவில் உணர்ந்து கொள்வர்.

முஸ்லிம் ஆட்சிக்கே முற்றுப்புள்ளி வைத்த மொகலாய மன்னர்களின் அடிச்சுவட்டில் வருவதாகக் கற்பனை பண்ணுவதால் களிப்புறும் கல்வி மந்திரியவர்கள் இவ்வினவுக்குத் தரும் பதில்-நான் அறிமுகப்படுத்த விரும்புவது "இஸ்லாமிய நடன முறை" என்பதுவாம். அப்படியென்றால் எது இஸ்லாமிய காதல்-எது இஸ்லாமிய காமம்-எது இஸ்லாமிய கலவி-என்ற வினக்களுக்கு தெளிவான விடை தர அமைச்சர் அவர்கள் தயங்குவதன் நியாயமென்ன?

## திருக்குர்ஆன் என்ன கூறுகின்றது ?

"(நபியே!) விசுவாசியான ஆண்களுக்கு நீர் கூறும்: அவர்கள் தங்கள் பார்வைகளைக் கீழ் நோக்கியே வைக்கவும். அவர்கள் தங்கள் கற்பையும் இரட்சித்துக் கொள்ளவும். இஃது அவர்களைப் பரிசுத்தமாக்கி வைக்கும்.......நிச்சயமாக அல்லாஹ் அவர்கள் செய்பவைகளை நன்கறிந்தவனாக இருக்கின்றான்."

"(நபியே!) விசுவாசிகளான பெண்களுக்கு நீர் கூறும்: அவர்களும் தங்கள் பார்வையைக் கீழ் நோக்கியே வைத்துத் தங்கள் கற்பையும் இரட்சித்துக் கொள்ளவும். அன்றி தங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேகத்தில் (பெரும்பாலும்) வெளியில் இருக்கக் கூடியவைகளைத் தவிர தங்கள் (ஆடை ஆபரணம் போன்ற) அலங்காரத்தை வெளிக்காட்டாது மறைத்துக் கொள்ளவும். தங்கள் முந்தானைகளால் மார்பையும் மறைத்துக்கொள்ளவும்.

பெண்கள் தங்களுடைய கணவர்கள், தங்களுடைய தந்தைகள், தங்களுடைய கணவர்களின் தந்தைகள், தங்களுடைய குமாரர்கள், தங்களுடைய கணவர்களின் குமாரர்கள், தங்களுடைய சகோதரர்கள், தங்களுடைய சகோதரிகளின் குமாரர்கள், தங்களுடைய சகோதரர்களின் குமாரர்கள், அல்லது (முஸ்லிமாகிய) தங்களுடைய இனத்தாரின் பெண்கள், தங்களுடைய அடிமைகள், அல்லது பெண்களின் விருப்பமற்று தங்களை அண்டி ஜீவிக்கும் ஆண்கள், பெண்களின் மறைவான அவயவங்களை அறிந்துகொள்ளாத சிறு பிராயத்தையுடைய (ஆண்) குழந்தைகள் ஆகிய இவர்களைத் தவிர மற்றெவர் முன்னும் (தாங்கள் அணிந்திருக்கும் ஆடை ஆபரணங்கள் போன்ற) தங்களுடைய அலங்காரத்தை வெளிவர விடாதீர்கள். அன்றி, மறைந்திருக்கும் தங்களுடைய அலங்காரத்தை அறிவிக்கும் நோக்கத்துடன் தங்களுடைய கால்களை (பூமியில்) தட்டித் தட்டி நடக்கவேண்டாம். விசுவாசிகளே! (இதில் ஏதும் உங்களில் தவறு ஏற்பட்டுவிட்டால்) நீங்கள் சித்தி பெறும் பொருட்டு அல்லாஹ்வின் பக்கமே பாவமன்னிப்பைக் கோரி, (உங்கள் மனதைத்) திருப்புங்கள்.''

அத்தியாயம்: நூர்—பிரகாசம்.
வசனங்கள்: 30:31.

உலமாக்களும் கல்விமான்களும் இவ்வசனங்களையே நடனத்துக்கு எதிராக மேற்கோள் காட்டியுள்ளனர்.

இனி திருக்குர்ஆனின் அடிப்படையில் நடனம் அனுமதிக்கப்பட்டதுதானு என்பதைச் சிந்தித்துப் பாருங்கள். நடனத்தைப் பற்றி திருக்குர்ஆன் நேரடியாக ஒன்றும் கூறவில்லை எனக்கூறும் அமைச்சரின் போக்கு சரியானதுதானு என்பதற்கு விடை கூறும் பொறுப்பு பொதுமக்களாகிய உங்களைச் சார்ந்தது.

ஒரு பெண் மேடையில் வந்து தனது அலங்காரத்தைக் காட்டிப் பிறரின் இச்சையைத் தூண்டுவதை திருக்குர்ஆன் நேரடியாகத் தடுக்கவில்லையா? ஒரு பெண்ணை ஆண் நேரடியாகக் கூர்ந்து பார்ப்பதையே திருக்குர்ஆன் நேரடியாகத் தடுத்திருக்கும்போது நடனம் ஆடும்போது ஒரு பெண்ணைப் பார்ப்பது கூடாதென்பது குர்ஆனில் கூறப்பட்டிருக்கின்றதா அதுவும் நேரடியாக என்னும் அமைச்சருக்கு என்னதான் நடந்துவிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடனத்தின் முக்கியஅம்சமாக நாட்டியக்காரியின் அலங்காரம் உள்ளது. அதுவும் பிறரைக் கவர்வதற்கான அலங்காரம். இத்தகைய அலங்காரம் கூடாதென திருக்குர்ஆன் கூறவில்லையா? நடனத்துக்காகசாதாரணமாக எடுத்துக்கொள்ளப்படும் காதல்-காமம் போன்ற பண்கள் ஒரு கலையென்ற அடிப்படையில் இஸ்லாத்தால் அல்லது திருக்குர்ஆனால் நேரடியாகத் தடுக்கப்பட்டிருப்பதை கல்வி மந்திரியவர்கள் காண மறுப்பதன் மர்மமென்ன? மனக்குழப்பமா? அன்றி நேரடியாக விடைகாண முயற்சிப்பதன் மூலம் மறைமுகமாக திருக்குர்ஆனின் சர்வவல்லமைத் தன்மைக்கு இடும் சவாலா?

## மந்திரியின் பத்வா

ஆனால் தன்னைப் பற்றி அளவுக்கதிகமாக எண்ணியது மட்டுமன்றி தன்னை யாரோ ஒரு மடையன் 'மௌலானா' என்று கூறினானும் என்று கூறிக்கொண்டு மார்புதட்டிப் பேசும் மந்திரியார் கடந்த 22. 12. 73 அரபு ஆசிரியர்களின் மாநாட்டில் பேசும் போது மேற்கண்ட திருக்குர்ஆன் வசனங்களுக்கு காலத்துக்கேற்ற மந்திரிப் பதவியில் ஒட்டிக்கொண்டிருக்க உகந்த விளக்கங்களைத் தர முயன்றார். அதுவும் முஸ்லிம் சமூகத்தின் முதுகெலும்புகளென நாம் நம்பும் அறுநூறுக்கும் மேற்பட்ட அரபு மௌலவிமார் மாநாட்டில்-அலிகார் பட்டதாரி அல்ஹாஜ் புதியுதீன்மகுமூத் தந்த விளக்கத்தையும் அவரின் கற்றுக்குட்டித் தனத்தையும் சற்றுப் படித்துப் பாருங்கள்:

"இவ்வசனங்களின் பொருளை நாம் சரியாக அறிய வேண்டும். குர்ஆன் கூறுவதை வேறுவிதமாகப் புரிந்துகொண்டு வீதியில் நடக்கும்போது கீழே பார்வையைச் செலுத்திக்கொண்டிருந்தால் வாகனங்கள் எம்மை மோதிவிடும். குர்ஆன் கூறுவதன் பொருள் ஒருவருக்கொருவர் இச்சையுடன் பார்க்கக் கூடாது என்பதுதான். ஒரு விஷயத்தை ஒருவன் செய்யக் கூடாதென்றால் குர்ஆன் அதை நேரடியாக ஹறாம் எனக் கூறியிருக்கும். ஆனால் நடனம் ஹறாம் எனக் குர்ஆன் நேரடியாகச் சொல்லவில்லை."

"எனது கருத்துக்களை அண்மையில் இலங்கைக்கு வந்த மௌலானா பஸ்லுர் ரஹ்மான் அன்ஸாரி அவர்களிடமும் கூறினேன். அவரும் என்னை ஆதரித்தார். அப்போது அருகிலிருந்த ஒருவர் என்னைப் பார்த்து, எனது விளக்கங்களைக் கேட்டபின் "நீங்களும் ஒரு மௌலானாதான்" என்று கூறினார். நடனம் கூடாது என்று ஒவ்வொரு ஜமாஅத்தும் சங்கமும் நிறைவேற்றும் தீர்மானங்களையும் அனுப்பி வைக்கும் கள்ளக் காகிதங்களையும் ஏற்றுக்கொள்ள நான் தயாராக இல்லை."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"முஸ்லிம் சமூகத்தின் மீது எனக்கும் பற்றுண்டு. 40 ஆண்டுகள் முஸ்லிம் சமூகத்துக்காக உழைத்தவன் நான். இதுவரை செய்துவந்தது போல் என்றும் முஸ்லிம் சமூகத்துக்காகச் செய்வேன்." "நான் செய்வது தவறெனில் எவரும் நேரடியாக வந்து அதைத் தெரிவிக்கலாம். உண்மையில் அது தவறென்ருல் திருத்திக்கொள்வேன்.,'

"இன்று என்னை எதிர்ப்பவர்கள் யூ. என். பீ. மீண்டும் தலை தூக்குவதால் தைரியப்படுகின்ருர்கள். அரசியல் ஆதாயத்தையோ வேறு ஆதாயங்களையோ கருதி மார்க்கத்தைப் பயன்படுத்த யாருக்கும் நான் இடமளிக்கமாட்டேன்."

## மௌலவிமாரின் பொறுப்பற்ற போக்கும் அரபு-ஆசிரியர் மாநாட்டின் அலங்கோலமும்!

மந்திரி குர்ஆன் விரிவுரையாளராக மாறியதுதான் தாமதம்- எல்லா மௌலவிமார்களும் மௌலவியாக்களும் பெட்டிப்பாம்புகளாக மாறிவிட்டனர் தனது தவறை நேரடியாகச் சுட்டிக் காட்டும்படி மந்திரி கேட்டபோது; உரோசம், சுரணை எதுவுமின்றி எமது உலமாக்கள் உறக்கத்தில் ஆழ்ந்துவிட்டனர். அது மட்டுமா? 'அல்லாஹு அக்பர்' என்ற கோஷம் எழுப்பி அவரை உற்சாகப்படுத்தியும் விட்டனர். ஆனுல் அமைச்சர் பதியுதீன் ஹாஜியார் அவர்கள் என்ன செய்தாரெனத் தெரியுமா? வெகுண்டெழுந்தார் "அல்லாஹு அக்பர் என்ற கோஷத்தை இவ்வாருன கூட்டங்களில் நீங்கள் உபயோகிக்கக் கூடாது" என்று 'பத்வா' கொடுத்தார். அவ்வளவுதான் தாமதம். அதன் பின்னர் அமைச்சரின் பேச்சைப் பாராட்ட வேண்டிய சந்தர்ப்பங்கள் ஏற்பட்ட போதெல்லாம் 'அல்லாஹு அக்பர்' என்ற கோஷத்துக்குப் பதிலாகத் தமது கரங்களை அடிக்கத் தொடங்கிஞர்கள் அவ்வாலிம் பெருமக்கள்!

கல்வியமைச்சரின் கண்கட்டு வித்தையை பார்க்கின்ற இளைஞர் சமூகம் அவருக்காகக் கண்ணீர் விடுகின்றது. ஏன் தெரியுமா? தேர்தல் கூட்டங்களில் தான் சார்ந்திருக்கும் கட்சியின் வெற்றிக்காகவும் அவருடனிருக்கும் காபிரான அரசியல்வாதிகளின் நீண்ட வாழ்வுக்காகவும் முஸ்லிம் மக்களை, அவர்கள் பெரும்பான்மையாக வாழும் தொகுதிகளிலெல்லாம் எழுந்து நிற்கச் சொல்லி- அல்லாஹு அக்பரென்ற கோஷத்தை வானளாவ முழங்குங்கள் என்ற பெருமகஞ இன்று இவ்வாறு கட்டளையிடுகின்ருரெனக் கவலையுடன் சிந்திக்கின்ரேம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குர்ஆனின் வார்த்தைக்கு மாண்புமிகு மந்திரியார் சுலபமாக விளக்கம் அளித்த போதோ, நடனம் ஹலால் என நிரூபிக்க முயன்ற போதோ நடனத்தைக் கற்பித்தே தீருவேன் என அடித்துச் சொல்லிய போதோ எதிர்த்துப் பேச அங்கிருந்த அறுநூறுக்கு மேற்பட்ட உலமாக்களில் ஒருவருக்குக்கூடத் தைரியம் இருக்கவில்லை. ஆகக் குறைந்தது நாம் எடுத்துக் காட்டிய குர்ஆன் வசனத்தின் இறுதிப் பகுதியையாவது அதாவது:.

"(இதில் ஏதும் உங்களில் தவறு ஏற்பட்டுவிட்டால்) நீங்கள் சித்திபெறும் பொருட்டு அல்லாஹ்வின் பக்கமே பாவமன்னிப்புக்கோரி (உங்கள் மனதைத் திருப்புங்கள்)" என்பதையாவது மந்திரியாருக்கு எடுத்துக் கூறி நேர்வழி காட்டியிருக்கலாம். அந்த அளவுக்குக் கூட ஆலிம்கள் மந்திரியாருக்கு நேர்வழி காட்டியிருக்கக் கூடாதா?

அல்லது மந்திரி சமூகத்தை வழிகெடுக்கின்றார். ஆகவே நாம் மந்திரியை வழிகெடுப்போம்—என்ற தீர்மானத்துடன் அடங்கியிருந்தனரோ அவ்வாலிம் பெருமக்கள்.

பெருமானார் ஒரு தடவை கூறினார்கள்: "நீங்கள் ஒரு தீமையைக் கண்டால் அதைக் கைகளினால் தடுங்கள். அதற்கும் முடியாவிட்டால் வாயின் சொற்களால் தடுங்கள். அதற்கும் முடியாவிட்டால் உங்கள் மனதால் வெறுங்கள். அவ்வாறு மனதால் வெறுப்பது ஈமானின் பலவீன நிலையாகும்."— இப் பொன் மொழியை நினைக்கும்போது எமது மௌலவிமார்களுக்கு ஆகக் குறைந்தளவு ஈமான் கூட இல்லையா? என்றுதான் கேட்கத் தோன்றுகின்றது. அவ்வாறிருந்தால் வெளிநடப்பாவது செய்திருப்பார்களே!

ஓரிரு மௌலவிமார் மந்திரி பேசும்போது அவரைக் குறுக்கிட விரும்பி கூட்டத்தின் தலைவரிடம் குசுகுசுத்தும் துண்டுகள் எழுதியும் அனுப்பினார்களாமென்றும் பின்னர் கேள்விப்படுகின்றோம். வெளிநடப்புக் கூடச் செய்யத் தைரியமில்லாத அவர்களுக்காகவும் அவர்கள் செய்த முயற்சிகளுக்காகவும் அவர்கள் மீது பரிதாபப்படுகின்றோம். அனுதாபம் கூறுகின்றோம்.

ஆனால் அவர்களைக் குறுக்கிடாமல் தடுத்தது மட்டுமன்றி அமைச்சர் இருக்கும்போது அந்த ஓரிருவர் பேசுவதற்குச் சந்தர்ப்பமும் அளிக்காமல் இருந்து—சந்தர்ப்பவாதியாக நல்ல பிள்ளையாக நடித்த அரபு ஆசிரியர் சங்கத் தலைவர் மௌலவி எம். ஜே. எம். றியாழ் ஹஸரத் (இஸ்லாமிய ஆராய்ச்சி மஜ்லிஸின் பொதுச் செயலாளரும்கூட) அவர்களையும் அவர்களின் போக்கையும் எண்ணும்போது வெட்கப்படுகின்றோம்; வேதனையடைகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோபமடைகின்றோம்; கொதித்தெழுகின்றோம். கல்வியதிகாரிப் பதவியா அல்லது முஸ்லிம் சமூகத்தின் எதிர்காலமா முக்கியம் என்ற வினாவுக்கு "எனது பதவியே" எனச் சொல்லாமல் சொல்லிக்காட்டியதுமன்றி செயலிலும் காட்டியுள்ளார் நியாழ் மௌலவியவர்கள். மௌலவியவர்களின் கைங்கரியம் பலேஜோர்!

அம்மாநாட்டில் சமூகமளித்திருந்த ஜெம்மியதுல் உலமாவின் தலைவர் ஏ. எம். எல். எம். பளீல் மௌலவி-அகில இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கத் தலைவர் ஜனாப் எஸ். எச். எம். யாஸீன் முதலியோர் கூட அமைச்சரின் கூற்றுக்களுக்கு ஆமாம் போட்டுக்கொண்டு அமைதியாயிருந்ததன் இரகசியம்தான் என்ன? கல்வியமைச்சரின் மனம் புண்பட்டுவிடும் என்பதா? அன்றி புற ஊர்களுக்கு இடமாற்றம் கிடைத்துவிடும் என்ற அச்சமா? சமூகத்தின் பெயரில்—இஸ்லாத்தின் பெயரில் மௌலவிகளாகிய அரபு ஆசிரியர்களாகி-முஸ்லிம் ஆசிரியர்களாகி-இஸ்லாத்தின் பெயரில் உயிர்வாழ்ந்துகொண்டிருக்கும் இவ்வுத்தம புருஷர்களின் தியாக எண்ணம்தான் என்னே!

## பதியுதீனின் குளறுபடிகள்

குர்ஆன் கூறுவதன் பொருள் ஒருவரை ஒருவர் இச்சையுடன் பார்க்கக் கூடாது என்பதுதான். எனவே இச்சையின்றி எப் பெண்ணுடனும் எதையும் செய்யலாம் என்பதுதான் மந்திரியின் சிந்தனை. குர்ஆனின் அடிப்படையில் மேற்குறிப்பிட்ட திருக்குர் ஆன் வசனத்தின் பிரிவுகளுக்குள் அடங்குபவர்களுக்கு மத்தியில் மாத்திரமே இச்சையேற்படாது என்பது வெள்ளிடைமலை. அது பொய்! அதற்கு விதிவிலக்குண்டு என பதியுதீன் ஹாஜியார் அவர்கள் விளைதிக்கத் தொடங்கினாரானால், மதிப்புக்குரிய மந்திரி அவர்கள் முழுப் பூசணிக்காயை சோற்றுக்குள் மறைக்க முயல்கின்றார் என்பதுதான் அதன் அர்த்தம். பெற்ற தந்தைமாரே தம் பெண்மக்களின் கற்பைச் சூறையாடும் இக் கலியுகத்தில் "இச்சையற்ற பார்வை" யென்ற பதியுதீனின் கொள்கை—வெறும் பம்மாத்தும் வேடிக்கையும் ஏமாற்றுமாகும். இதை முஸ்லிம்கள் மட்டுமல்ல எந்த நேர்மையுள்ள மனிதனுமே ஏற்றுக்கொள்வான். எத்தனையோ பெரிய முனிவர்களினதும் ஞானிகளினதும் தவங்களே இவ்விச்சையால் கலைபட்டிருக்கின்றதென்பதைப் படிக்கும் எமக்கு இந்த பதியுதீன் மாமுனியின் புதிய சித்தாந்தத்தின் புறத்தே இருக்கும் புரட்டும் ஏமாற்றமும் இலகுவிலே புரிந்துவிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்லாம் கூறுகின்றதெனச் சொல்லப்படும் கூற்றுக்களுக்கு திருக்குர் ஆனிடம் ஆதாரம் கேட்கும் அமைச்சர் அவர்களே! பின்வரும் வினாக்களுக்கு விடைதாருங்கள்: ஐந்து வேளைகள் தொழ வேண்டுமென குர்ஆனில் எங்கே கூறப்பட்டுள்ளது? யானை, பூனை நாய் பாம்பு, ஓநாய், எலி, புலி, கரடி, தேள் போன்றவற்றைச் சாப்பிடக் கூடாதெனக் குர்ஆனில் எங்கேயாவது கூறப்பட்டுள்ளதா? குர்ஆனில் நேரடியாக விலக்கப்படாதவை 'ஹலால் என்ற உங்கள் பத்வா சரியானால் ஏன் இவற்றையும் சாப்பிடலாம்தானே? ஒரு பெண் ஒன்றுக்கு மேற்பட்ட ஆண்களை ஒரே நேரத்தில் கணவர்களாக வைத்திருப்பதைப் பற்றி திருக்குஆன் நேரடியாக ஒன்றும் கூறவில்லையே! ஒரு பெண் பல ஆண்களை மணப்பது ஹலாலாகி விடுமா?

## பதியுதீனுக்கு ஓர் எச்சரிக்கை

நடனம் சம்பந்தமான உங்கள் கருத்தை மௌலானா அன்ஸாரி அவர்கள் ஆதரித்ததாக நீங்கள் கூறினீர்களே! அவ்வாறு மௌலானா கூறினாரெனக்கூற உங்களுக்குள்ள தைரியம்தான் எத்தனை! அவ்வாறு மௌலானா அவர்கள் சிலவேளைகளில் கூறியிருந்தாலும் கூட அக்கூற்று திருக்குர்ஆனின் அடிப்படைக்கே வெடிவைக்கும் வெட்கக் கேடான ஒன்றாகும்! அதை யார் ஏற்றுக்கொண்டாலும் விழிப்புடன் வாழும் இலங்கை வாழ் முஸ்லிம் சமூகம் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை.

உங்களுக்கு ஒன்று சொல்கின்றோம். மௌலானா கூறுகின்றார் அல்லது மந்திரி கூறுகின்றார் என்பதற்காக—திருக்குர்ஆனையும் பெருமானார் வாழ்வு முறையையும் விட்டுக்கொடுக்க நாம் தயாராக இல்லை. ஏனெனில் உங்களைப்போன்ற மந்திரிமார்களும் மற்றைய மௌலானாக்களும் இன்று வருவார்கள். நாளை மறைவார்கள். ஆனால் இஸ்லாமும்—முஸ்லிம் சமுதாயமும்—அவை எவ்வித சூழ்நிலைகளுக்கு மத்தியில் வைக்கப்படினும் நீங்கள் இருந்தாலும் இல்லாவிட்டாலும், விரும்பினாலும் அல்லாவிட்டாலும் வாழத்தான் போகின்றது. எனவேதான் நிரந்தரமான சமுதாயம் நிரந்தரமான கொள்கைகளிலிருந்து வெளிச்சத்தைப் பெறவேண்டிய அவசியம் ஏற்படுகின்றது.

"நடனம் கூடாது என்பது எனக்கும் தெரியுமென்று" கூறிய உங்களுடைய நாவுதானா ஐயா...! அது சரிதான் என்ற தீர்ப்பையும் அளிப்பது? நாவுக்கு வலுவான எலும்பொன்றின் பற்றுக்கோடு இல்லையென்பதற்காக அது வளைகின்றவாறெல்லாம் கதைக்க அனுமதிப்பது உங்களைப்போன்ற பெரிய மனிதர்களுக்கு அழகில்லை. அது மட்டுமன்றி கல்வியமைச்சு மாநாட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்டபத்தில் ஒரு நிறமும், ஸாஹிரு மண்டபத்தில் வேறு நிறமும் காட்டும் பச்சோந்தியாக நாங்கள் உங்களைக் கருதவில்லை. எனவே உங்களை அவ்வாறு கருதக்கூடிய நிலைக்கு எங்களை தயவு செய்து ஆக்காமலிருப்பீர்களாக!

“அரசியல் ஆதாயத்தையோ வேறு ஆதாயங்களையோ கருதி மார்க்கத்தைப் பயன்படுத்த யாருக்கும் நானிடமளிக்கமாட்டேன்” எனக் கூறும் உங்கள் கூற்றை வாலிபர்களாகிய நாங்கள் ஆயிரம் கரங்கள்கொண்டு வரவேற்கின்றோம். ஆனால் அதே வேளையில் “அரசியல் லாபம் பெற மார்க்கத்தை நீங்கள் பயன்படுத்த விரும்பினால் சமுதாயம் உங்களை விட்டு வைக்காது” என்ற அன்பான எச்சரிக்கையையும் இச் சந்தர்ப்பத்தில் தர விழைகின்றோம்.

## முஸ்லிம் பாடசாலைகளில் ஏன் நடனம் கூடாது?

“நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் முஸ்லிம் பாடசாலைகளில் நடனத்தை அறிமுகப்படுத்துவோம். நடனம் பயில்வது கட்டாயமில்லை. விரும்பியவர்கள் பழகட்டும். விரும்பாதவர்கள் விடட்டும்” என்ற இறுதி முடிவுக்கு அமைச்சர் வந்திருக்கின்றார். இம்முடிவுக்கு வர அவருக்கு சட்டரீதியான அதிகாரம் இருக்கலாம். ஆனால் மனச்சாட்சிரீதியில் இம் முடிவைச் செய்ய அவருக்கு எவ்வித உரிமையுமே இல்லை.

ஏனெனில் முஸ்லிம் பாடசாலைகள் முஸ்லிம்களின் தனித்துவத்தைப் பேணுவதற்காகப் பெறப்பட்ட உரிமைகள். எனவே தனித்துவத்திற்கு களங்கம் ஏற்படக் கூடிய வகையில் செய்யப்படும் எல்லாக் கருமங்களையும் எதிர்க்கும் உரிமை சமுதாயத்துக்கு உண்டு.

அமைச்சரின் வாதம் சரியானது என்றால் ஏன் அவர் முஸ்லிம் பாடசாலைகளில் வேற்று மதங்களைப் பயிலச் சந்தர்ப்பம் அளிக்கக் கூடாது? விரும்பியவர்கள் படிக்கட்டும். விரும்பாதவர்கள் விடட்டும்? (இந்நிலை வராமல் இறைவன் காப்பாற்றுவானாக!)

சமுதாய அடிப்படைகளில் உருவாக்கப்பட்ட பாடசாலைகளுக்குள் தேசியவாதச் சிந்தனைகளை ஊடுருவச் செய்ய முயற்சிப்பது அச்சமுதாயத்துக்குச் செய்யும் பெரும் துரோகமாகும். இத்தகைய துரோகங்கள் சுயநினைவின்றியோ அல்லது வெறியாலோ அல்லது தன்னிச்சையாலோ அல்லது சுயநலத்தாலோ செய்யப்படலாம். ஆனால் சமுதாயம் தூங்குகின்றது என நினைப்பது பெரும் தவறும் முட்டாள்தனமுமாகும்!

## சமுதாயமே விழித்தெழு!

எனவேதான் முஸ்லிம் சகோதர சகோதரிகளே! வளரும் எம் சமுதாயம் முற்றாக நாசமாகக் கூடிய வழிவகைகள் மேற்கொள்ளப்படும் ஓர் அபாயகரமான காலக்கட்டத்திலே உங்கள் விழிப்புணர்வை நாடுகின்றோம். முஸ்லிம்களின் தலைவரென மதிக்கப்பட்ட ஒருவரே, எம் சமுதாயத்தை வழிகெடுக்கத் துணிந்துவிட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டார். மதிப்புக்குரிய முஸ்லிம் பெண்களை நாட்டியக்காரிகளாக்கி மதிப்பிழந்து, மானமிழந்து வாழச் செய்ய கல்வியமைச்சர் கங்கனம் கட்டிவிட்டாரோ என்றுகூட எண்ணத்தோன்றுகின்றது.

அவரது செயலுக்கு வழிவிட்டு ஆமைகளாய், ஊமைகளாய் வாளாவிருந்துவிட்டார்கள் முதுகெலும்பில்லாத முல்லாக்களும் மானங்கெட்ட மௌலவிமாரும், உரோசமற்ற உலமாக்களும். பரிசுத்தக் குர்ஆனையும் மாநபியின் ஹதீஸையும் முஸ்லிமாக இருந்தும் மதிக்காமல், அவற்றைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்த முற்பட்ட கல்வியமைச்சரின் செயலை நேரில் கண்டும் தடுத்துநிறுத்தத் தவறிவிட்டார்கள் இதுகாலம் வரை எம்மால் மதிக்கப்பட்ட உலமாப் பெருமக்கள்.

முஸ்லிம் தலைவர்களோ வழிகெடுக்கின்றவர்களாக அல்லது சமுதாயப் பிரச்சினைகளில் அக்கறையற்றவர்களாக அல்லது சுயநலவாதிகளாக மாறிவிட்டனர். சமுதாயமோ தனது சக்தியற்ற நிலையை உணராது. ஆபத்துவேளையிலும் ஆமைபோல் அடங்கிக் கிடக்கின்றது. இந்நிலையில் சமுதாயம் என்னும் வீணையின் நாதத்தை மீட்டவேண்டிய பொறுப்பு—வருங்கால சமுதாயத்தின் வச்சிரத் தூண்களாகிய வாலிபர்களின் கரங்களிலுள்ளது. எனவேதான் வாலிப சக்திகளே ஒன்றுபடுவோம் வாரீர்! ஒருமித்துச் செயல்பட வாரீர்! வீரக் குரல்களை சமுதாயத்தின் எழுச்சிக்காக விடுக்க வாரீர்! என வேண்டுகோள் விடுக்கின்றோம். எமது கோரிக்கை சமுதாயப் புரட்சியை, மறுமலர்ச்சியை தன்னுணர்வை ஏற்படுத்துவதற்கான குரலாகும்! அக்குரலுக்கு உரமூட்டுவதா அன்றி அக்குரலைக் காதுகளில் விழுத்தாமலிருப்பதா என்பதைத் தீர்மானிக்க வேண்டியது; சமுதாயத்தின் ஒவ்வொரு மட்டத்திலுமுள்ள சகோதர சகோதரிகளின் பொறுப்பாகும்.

எனினும் சமுதாயத்தின் அப்பெரும் கடனை நினைவுபடுத்த வேண்டியது அக்காலக்கட்டங்களிலேயுள்ள பொதுநலவுணர்வுள்ளவர்களின் கடமையாகும் அக் கடமையையே இலங்கை முஸ்லிம் ஐக்கிய முன்னணியின் சார்பில் நாம செய்கின்றோம்.

## எனவேதான்

அமைச்சரின் முடிவு எவ்வாறு தவறானதோ அவ்வாறே ஆலிம்களின் மௌனமும் தவறானது என்பதைச் சுட்டிக்காட்டவும்—அதற்காகத் தூதுக் குழுக்கள் செல்லவும்—உரிய அதிகாரிகளைப் பேட்டி காணவும்—அமைச்சரவையின் முடிவை மாற்றவும்—பொதுக்கூட்டங்கள் கூட்டவும்—பொதுசன அபிப்பிராயத்தைத் திரட்டவும் உங்கள் ஒவ்வொருவரினதும் ஒத்துழைப்பை வேண்டுகின்றோம்.

இவ்வண்ணம்,
எம். எச். எம். அஷ்ரப் (தலைவர்)
Attorney at Law.
எம். பி. எம். நிஸாம் (செயலாளர்)

முஸ்லிம் ஐக்கிய முன்னணி
298, லெயார்ட்ஸ் புரோட்வே,
கொழும்பு 14.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"யாருக்குப் புகழ் கிடைக்கின்றது என்பதைப் பற்றி ஒருவன் கவலைப்படவில்லையானால் அவனால் ஆற்றக் கூடிய சாதனைகளுக்கு அளவேயில்லை"—யாரோ.

இப்பிரசுரத்தை எவரும் முழுமையாக மறுபிரசுரம் செய்யலாம். இதன் பிரதிகள் தேவையானோரும் ஆதரவாளர்களும் கீழ்வரும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும். பிரதிகள் தேவையானோர் ஒவ்வொரு பிரதிக்கும் தபாற் செலவாக 20 சத முத்திரையொன்று அனுப்ப வேண்டும்.

எம். பி. எம். நிஸாம்,
செயலாளர்,
முஸ்லிம் ஐக்கிய முன்னணி,
298 லெயார்ட்ஸ் புரோட்வே,
கொழும்பு 14.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"முஸ்லிம் இளைஞனே! சத்திய இஸ்லாத்தின் கப்பலை ஓட்டிச் செல்லவேண்டிய பொறுப்பு உனது கரங்களிலேயே உள்ளது. இளைப்பாறும் நேரம் உனக்கெங்கே இருக்கின்றது. நீ செய்ய வேண்டிய சேவை இனியும் எவ்வளவோ இருக்கிறது"

—சர். அல்லாமா முஹம்மது இக்பால்

* சமுதாயத்தின் தனித்துவம் பேணவும்
* உரிமைகளுக்காகப் போராடவும்
* கடமைகளைச் செய்யவும்

ஒரே கொடியின் கீழ் ஒன்றுபடுவோம்!
வென்று வருவோம்!!

முஸ்லிம் ஐக்கிய முன்னணி,
298 லெயார்ட்ஸ் புரோட்வே,
கொழும்பு 14.

டயமண்ட் பிரிண்டர்ஸ், கொழும்பு 3.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org